**24.02.2025**

**அ.வ.எண்.194/2015**

**<u>பி.சா.3 வசந்த் குமார் அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலம் அவருடையது என்று கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி மற்றும் எனது சகோதரர் 3ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது நான் வந்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்1194/2 மற்றும் 1194/1பி. தாவா சொத்துகளின் மொத்தம் விஸ்தீரணம் 7 1/4 செண்டுக்கு இந்த வழக்கு நடக்கிறது. தாவா சொத்துகளின் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் என்று எதன் அடிப்படையில் எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறுகிறேன் என்றால் வாய்மொழியாக கிரையம் வாங்கியதாக எனது தகப்பனார் என்னிடம் கூறினார்.

2. யாரிடமிருந்து கிரையம் வாங்கியதாக எனது தகப்பனார் கூறினார் என்றால் 1ம் வாதி ராஜா என்பவரிடமிருந்து எனது தகப்பனார் கிரையம் வாங்கினார். எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1989ம் வருடம். இந்த விவரம் எனது தகப்பனார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் எனது தகப்பனார் ராஜா என்பவரிடமிருந்து வாய்மொழியாக கிரையம் பெற்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. சுயராஜ்ஜியமாக கிடைக்க பெற்றது என்று பி.சா.ஆ.1ல் சொல்லியுள்ள விவரம் தவறு என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரில் எந்த வருடம்

பட்டா கொடுக்கப்பட்டது என்றால் 2003ம் வருடம். தாவா சொத்துகள் வாதியின் தகப்பனார் நாராயணன் 1927ம் வருடம் மற்றும் 1945ம் வருடம் கிரையம் வாங்கிய சொத்துகள் என்றால் எனக்கு தெரியாது.

3. நாராயணன் என்பவரிமிருந்தோ அல்லது அவரது வாரிகளிடமிருந்தோ எனது தகப்பனார் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் முன்னிலைக்கு கிரையம் எதுவும் பெறவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்குதான் தெரியும். 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியின் சகோதரர் என்றால் சரிதான். 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு 2010ம் வருடம் வாதிகளின் தகப்பனாரிடம் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய ஒப்பந்ததின் அடிப்படையில்தான் 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடிசை வீடு கட்டிக் கொள்ள பிரதிவாதிகளின் தகப்பனார் அனுமதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

4. தாவா சொத்துகளின் உண்மையான உரிமையாளரான நாராயணன் மற்றும் வாரிசுகளிடமிருந்து சட்டபடி கிரையம் வாங்காமல் எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.2 பட்டாவின் அடிப்படையில்தான் எனது தகப்பனார் எனக்கு பி.சா.ஆ.1 எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். தவறான பட்டாவின் அடிப்படையில் பி.சா.ஆ.1 எழுதிக் கொடுத்ததால் அது

செல்லதக்கதல்ல என்றால் அது எனது தகப்பனாருக்குதான் தெரியும். உண்மையான உரிமையாளர் பெயரில் பட்டா வழங்காமல் எனது தகப்பனார் பெயரில் பட்டா வழங்கியது தவறு என்றால் எனது தகப்பனாருக்குதான் தெரியும்.

5. பி.சா.ஆ.1 பட்டா எனது தகப்பனார் பெயருக்கு எவ்வாறு வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் குறித்த விவரம் எனக்கு தெரியும். நான் தற்போது வசிக்கும் வீட்டின் முகவரி 5/3எ, மாரியம்மன் கோவில் தெரு, சின்ன காலனி. தாவா சொத்தில் வீடு இல்லை என்றால் தற்போது இல்லை. நான் தற்போது செங்கல்பட்டு, அண்ணாநகர், 3வது குறுக்கு தெரு, என்ற முகவரியில் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். செங்கல்பட்டில் எவ்வளவு காலமாக வசித்து வருகிறேன் என்றால் சுமார் 10 வருடமாக வசித்து வருகிறேன். நானும் எனது சகோதரரும் எனது தாயும் எனது தகப்பனாரும் செங்கல்பட்டில் வசித்து வருகிறோமா என்றால் நானும் எனது மனைவி பிள்ளையும் செங்கல்பட்டில் வசித்து வருகிறோம். எனது தாயும் எனது தகப்பனாரும் மதுராந்தகத்தில் வேறொரு வீட்டில் வசித்து வருகிறார்கள்.

6. எனது தகப்பனார் வசித்து வரும் வீட்டின் முகவரி என்ன என்றால் படவேட்டம்மன் கோவில் தெருவில் உள்ள வீட்டில் வசித்து வந்தார். தற்போது அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவம் பார்ப்பதற்கு எனது தம்பியுடன் சென்னையில் வசித்து வருகிறார். எனது தகப்பனார்

மதுராந்தகம், படவேட்டம்மன் கோவில் தெருவில் எத்தனை வருடமாக வசித்து வந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது தகப்பனார் எத்தனை காலமாக சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சுமார் 4 வருட காலமாக வசித்து வருகிறார்.

7. இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்தில் உள்ள குடிசை வீடு வசிப்பதற்கு தகுதியற்று இருந்தது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் வசிக்கவில்லை. 2ம் பிரதிவாதியும் தாவா சொத்தில் குடிசை வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் இல்லை. 2015ம் வருடம் இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவாசொத்தில் என்ன இருந்தது என்றால் எங்களது வீடு, மாட்டுகொட்டகை மற்றும் காலிமனை. எனது திருமணத்திற்கு முன்பு நான் எனது தகப்பனார் உடன் மதுராந்தகம், படவேட்டம்மன் கோவில் தெருவில் வசித்து வந்தேனா என்றால் இல்லை. எந்த வருடத்திலிருந்து எனது தகப்பனார் படவேட்டம்மன் கோவில் தெருவில் வசித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது.

8. தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.5/3எ. பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் நகல்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை சம்பந்தபட்ட துறையில் மனு செய்து அதன் அசல் அல்லது சான்றிட்ட நகல் பெற முடியும் என்றால் சரிதான். அவ்வாறு பெறுவதற்கு நீதீமன்றத்தில் மனு தாக்கல் செய்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் நடவடிக்கை எடுக்காததால் மேற்படி ஆவணங்கள் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

எனவே மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் நான் நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் குறித்து எனது பதிலுரையிலும் எனது பிரமாணவாக்குமூலத்திலும் நான் சொல்லாததால் அந்த ஆவணங்கள் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)